# 09 குசேலோபாக்கியானம்

கண்ணனுடன் சேர்ந்து குசேலர் சாந்தீப முனிவரிடம் கல்வி கற்றார். எனவே கண்ணனுக்கு நெருங்கிய நண்பரானார். பிற்காலத்தில் கண்ணன் துவாரகைக்கு அரசனானான். குசேலரோ சாதாரண குடிமகன். குசேலரின் குடும்பம் வறுமையில் வாடியது. ஒருநாள் குசோலரின் மனைவி சுசீலை, தன் கணவரை நோக்கி, நண்பர் கண்ணனிடம் சென்று குடும்ப நிலையைக் கூறி, நம் வறுமை நீங்கும் வகையில் சிறிது பொருள் பெற்று வரலாமே என்று கூறினாள். (தம் நண்பர் கண்ணனைக் காணச் செல்லும் போது, ஏதேனும் எடுத்துச் செல்ல வேண்டும் எனக் குசேலர் விரும்பினார்.) வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த சுசீலை, புல்லரிசி கொண்டு தயாரித்த சிறிதளவு அவலைக் கொடுத்தாள். கந்தல் ஆடை உடுத்த நிலையில், அந்த அவலைச் சிறிய முடிச்சாக முடிந்து, மறைத்து எடுத்துக் கொண்டு (குசேலர் துவாரகைக்குச் சென்றார். துவாரகையிலே கண்ணனைக் குசேலர் சந்தித்த) பகுதி இங்கு தரப்படுகின்றது.

## நூற் குறிப்பு

குசேல + உபாக்கியானம் = குசேலோபாக்கியானம் குசேலரைக் குறித்த கிளைக்கதை என்பது இதன் பொருள். இது பாகவதக் கதையின் ஒரு பகுதிக் கதையாகும். இக்கதையை வல்லூர் வேதராசபிள்ளை என்பவர் தமிழில் பாடினார். இந்நூல், குசேலர் மேல் கடல் அடைந்தது, குசேலர் துவாரகை கண்டு தம் நகர்ப்புறம் அடைந்தது, குசேலர் வைகுந்தம் அடைந்தது என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இந்நூலின் தேர்ந்தெடுத்த பாடல்கள் சில இங்கே தரப்பட்டுள்ளன.

**கிருஷ்ணன் குசேலரை உபசரித்து ஷேமம் விசாரிக்கின்றான்**

1. வழிநடந் திளைத்த வேயிம் மலரடி யிரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல வருடினான் கமலக் கண்ணன்
பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவுந் தெரியா னாகி
ஒழிவறு தவக்கு சேல னொன்றும்பே சாதிருந்தான்.

**அரும்பதங்கள் :-** கழி - மிக, வருடினான். - தடவினான் கமலக்கண்ணன் - தாமரை மலர்போலும் கண்களையுடைய கிருஷ்ணன் பழியில் - குற்றமற்ற. ஒழிவறு - முடிவில்லாத.

**பொழிப்புரை :-** வழி நடந்து இழைத்தவே இ மலரடி இரண்டும் என்று கலி மகிழ் சிறப்ப மெல்ல வருடினான் கமலக்கண்ணன் - இந்த மலர் போன்ற அடிகளிரண்டும் வழி நடந்ததால் மெலிந்தனவே என்று கூறி, தாமரை மலர் போன்ற கண்களையுடைய கண்ணபிரான் மிக்க மகிழ்ச்சியுண்டாக மெதுவாகத் தடவினான், பழி இல் பல் உபசாரங்கள் பண்ணவும் தெரியானாகி ஒழிவு அரு தவம் குசேலன் ஒன்றும் பேசாது இருந்தான் - குற்றமற்ற பலவகை உபசாரங்களைச் செய்யவும் அறியாதவனாய் நீங்கலில்லாத தவத்தையுடைய குசேலன் ஒன்றும் பேசாமல் இருந்தான்.

2. நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்புபெரு நீர்மையளே
மன்னுடைய சொற்காத்துச் சோர்விலா மாண்பினளே
தன்னுடைய வுயிராநின் றனைப்பேணுந் தன்மையளே
உன்னுடைய வருவாய்க்குத் தக்கசெல வுஞற்றுவளே

**அரும்பதங்கள் :- மனைக்கிழத்தி** - மனைக்கு உரிமை பூண்டவளாகிய **மனைவி நீர்மை** - குணம் மாண்பு - நற்குண நற்செய்கை **செலவுஞற்றுவள்**- செலவு செய்வாள். ஏகாரம் அனைத்தும் வினாப்பொருளில் வந்தன.

**பொழிப்புரை :-** நின்னுடைய மனக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மையளே - உன்னுடைய மனைக்குரியவள் நிறைந்த பெருந்தன்மையுடையவள். மன்னுடைய சொல் காத்து சோர்வு இலா மாண்பின்னுளே - நிலைபெறுதலையுடைய புகழைக் காத்துத் தளர்ச்சியில்லாத மாட்சிமையுடையவள். தன் உடைய உயிர் ஆநின் தன்னை பேணும் தன்மையளே - தனது உயிர் போல உன்னையும் போற்றுகின்ற இயல்பு உடையவள். உன்னுடைய வருவாய்க்கு தக்க செலவு உஞற்றுவளே - உனது வருமானத்திற்கு தகுந்த அளவில் செலவு செய்யும் தன்மை உடையவள்.

**பழைய நினைவுகள் எழுகின்றன.**

3. இருவேமு முன்னாளி லிலங்குசாந் தீபமுனி
வருகாம ரடிவணங்கி மாமறைகற் றுணர்ந்திடுநாட்
பெருகார்வத் தொடும்பேசிக் கொண்டிருந்த பேச்செல்லாந்
திருகாரா வுளத்துநினைத் திருக்கின்றா யோசிறப்ப

**அரும்பதங்கள் :-** காமர் - அழகிய ஆர்வம் - மிக்க விருப்பம் திருகு
ஆரா! - மாறில்லாத

**பொழிப்புரை :-** இரு வேமும் முன்நாளில் இலங்கு சாந்தீப முனி வருகார் அடி வணங்கி மாமறை கற்று உணர்த்திடு நாள் - நாம் இருவரும் அக்காலத்தில் விளங்கிய சாந்தீப முனிவருடைய அழகிய திருவடிகளை வழிப்பட்டு சிறந்த மறைகளைக் கற்று உணர்ந்து வருகின்ற காலத்தில், பெருகு ஆர்வத்தோடும் பேசிக் கொண்டிருந்த பேச்சு எல்லாம் திருகு ஆரா உள்ளத்து நினைத்திருக் கின்றாயோ சிறப்ப - மிகுந்த அன்புடன் பேசிக் கொண்டிருந்த பேச்சுகளெல்லாம் மாறுபாடு பொருந்தாத மனத்தில் மறவாது இருக்கின்றானையோ நலம் பெருக.

**கெழுதகைமை ( நட்புரிமை) பெருகின்றது..**

4. பந்தனை யகன்ற மேலோய் பற்பல நாட்குப் பின்பு
வந்தனை யெனக்கென் கொண்டு வந்தனை யதனை யின்னே
தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்ப
சிந்தனை நின்ற தென்றான் தெரிவரும் வஞ்சக் கள்வன்.

**அரும்பதங்கள் :-** பந்தனை - உலக பந்தம். பக்கணம் - பட்சணம், சிற்றுண்டி.

**பொழிப்புரை :-** பந்தனை அகன்ற மேலோய் பற்பல நாட்குப்பின்பு வந்தனை எனக்கு என் கொண்டு வந்தனை - ஆசைக்கட்டு நீங்கிய மேலோனே பல நாட்கள் கழிந்த பின் வந்தனை எனக்கு என்ன கொண்டு வந்தாய்? அதனை இன்னே தந்தனை ஆயின் நன்று தருசுவை பக்கணத்து என் சிந்தனை நின்றது என்றான் தெரிவு அரும் வஞ்சக்கள்வன் - அப்பொருளை இப்பொழுதே கொடுப்பாயாயின் நல்லது, சுவையை உடைய சிற்றுண்டியினிடத்தில் என் மனம் சென்றுள்ளது என்றான் எவராலும் தெரிந்து கொள்ள முடியாத வஞ்சனை கொண்ட கள்வன்.

5. நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த நாள்பல கண்ட கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கி பாங்குவைத் தினிதி னாய்ந்து
விடலருங் கற்பு வாய்ந்த மின்னனார் வணங்குந் தெய்வந்
திடமுற முடிந்து வைத்த சிறுபொதி கண்டு கொண்டான்

**அரும்பதங்கள் :-** **நடலை** - கபடம், பொய். **பாங்கு** - பக்கம். **படர்தல்** - போர்த்திருந்த ஆடை. **தெய்வம்** - குசேலரின் மனைவி **திடமுற** - உறுதியாக.

**பொழிப்புரை :-** நடலை தீர்ந்தவன் மெய் போர்த்த நாள் பல கண்ட கந்தை படர் தலை சுருக்கி - வஞ்சகம் ஒழிந்தவனாகிய குசேலனுடைய உடம்பில் மூடியுள்ள பல நாளான கந்தைத்துணியின் விரிந்த தலைப்பைச் சுருக்கி, வாங்கி பாங்கு வைத்து இனிதின் ஆய்ந்து விடல் அரும் கற்பு வாய்ந்த மின் அன்னார் வணங்கும் தெய்வம் - எடுத்துப் பக்கத்தில் வைத்து இனிமையாக ஆராய்ந்து (தெள்ளி) நீங்கமுடியாத கற்புப் பொருந்திய மின் போன்ற பெண்கள் வணங்கக் கூடிய தெய்வமானவன், திடமுற முடிந்து வைத்த சிறு பொதி கண்டு கொண்டான் - உறுதியாக முடிந்து வைத்துள்ள சிறிய பொதியைப் பார்த்து விட்டான்.

6. முன்னுமிவ் மவலொன் றேனு
முனைமுறிந் ததுவு மின்று
பன்னுமுட் டையுமின் றாகும்
பட்டவங் கையு மணக்குங்
கொன்னும்வாய் செறிப்பி னம்ம
குளமும்வேண் டுவதின் றென்னா
உன்னுபல் லுலகு முண்டோ
னொருபிடி யவறின் றானே

**அரும்பதங்கள் :-** **முன்னும்** - நினைக்கத்தக்க. **முனைமுறிந் ததுவுமின்று** - ஒன்றாவது முறியாது எல்லாம் முழு முழு அவலாகக் காணப்பட்டன
**முட்டை** - தவிடு **அங்கை** - உள்ளங்கை. **கொன்னும்** - குழறும். **குளம்** - வெல்லம். **உன்னு பல்லுலகு முண்டேன்** - எண்ணப்படும் சகல உலகங்களையும் தன்னுள்ளே அடக்கிய கிருஷ்ணன்.

**பொழிப்புரை :-** முன்னும் இந்த அவல் ஒன்று ஏனும் முனை முறிந்ததுவும் இன்று - கருதப்படுகின்ற இந்த அவலில் ஒன்று கூட முனை முறிந்ததாய் இல்லை, பன்னும் முட்டையும் இன்று ஆகும் - சொல்லப்படுகின்ற தவிடும் உமியும் இல்லையாகும். பட்ட அங்கையும் மணக்கும் கொன்னும் வாய் செறிப்பின் குளமும் வேண்டுவது இன்று என்னா - ( அவல் பொதி) பட்ட உள்ளங் கையும் மணத்தையும் உடைய தாகும் கொன்னல் பொருந்திய வாயில் அடக்கி வைத்திருந்தால் வாய்க்குச் சர்க்கரையும் வேண்டாததாகும் என்று கூறி, உன்னு பல் உலகும் உண்டோ ஒரு பிடி அவல் தின்றான் - நினைக்கப்படும் உலகத்தையும் ( ஊழிக்காலத்தில் வாயிலிட்டுக் காக்க முற்பட்ட திருமாளாகிய கண்ணன் ஒரு பிடி அவலைத்தின்றான்.)

**மறுநாள் குசேலர் கிருஷ்ணனிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படுகின்றார்.**

7. கதிருதிக்குங் காலையெழீ இக்
கடன்பலவு முற்றியடர்
முதிர் புலன் செற்றருஞான
முயன்றடைந்தோ னாதலினால்
மதிகுலத்து மன்னவன்பால்
வாய்திறந்தொன் றுங்கேளான்
நிதியமிகப் பெற்றவனாய்
நினைந்தூர்க்கு வழிக் கொண்டான்.

**அரும்பதங்கள் :-** கதிர் - சூரியன். எழீஇ - எழுந்து. கடன் பலவும் முற்றி - நித்திய கடன்களைச் செய்து முடித்து. புலன் - இந்திரியம். செற்று - வென்று மதிக்குலத்து மன்னவன் - கிருஷ்ணன் நிதிய மிகப் பெற்றவனாய் - மிக்க செல்வத்தைப் பெற்றவனைப் போல அக மகிழ்ந்து. வழிக்கொண்டான் - சென்றான்.

**பொழிப்புரை :-** கதிர் உதிக்கும் காலை எழீஇ கடன் பலவும் முற்றி அடர் முதிர் புலன் செற்று அரு ஞானம் முயன்று அடைந்தேன் ஆதலினால் - ஞாயிறு உதிக்கின்ற காலத்திலெழுந்து செய்கின்ற கடமைகளை செய்து நெருங்குகின்ற வளமிகுந்த ஐம்புலன்களை அடக்கி அருமையான ஞானத்தை முயற்சித்துப் பெற்றவன் ஆனபடியினால், மதி குலத்து மன்னவன் பால் வாய்திறந்து ஒன்றும் கேளான் - சந்திரகுலத்து மன்னனாகிய கண்ணபிரானிடத்தில் வாயைத் திறந்து ஒன்றும் கேளாதவனாய், நிதியம் மிக பெற்றவன் ஆய் நினைந்து ஊர்க்கு வழிக் கொண்டான் - செல்வத்தை மிகவும் அடைந்தவனாக எண்ணித் தன் ஊருக்குப் புறப்பட்டான்.

**குசேலருக்குச் செல்வம் மேன்மேலும் சுரக்கின்றது.**

8. அருந்தவர்கள் புகழ்சீர்த்தி யமைந்ததிருக்
கண்ணபிரா னருளி னாலே
பொருந்துவிர தாதிகளான் மிக்கிளைத்த
தன்னுடம்பு பூரிப் புற்ற
திருந்தபழங் கந்தைசெழும் பொன்னாடை
யாயிற்றா லிலங்கு கண்டப்
பெருந்துளப மணியாரம் பெருவிலைமுத்
தாரமாப் பிறங்கிற் றலோ.

**அரும்பதங்கள் :-** **அருந்தவர்கள் புகழ் சீர்த்தி யமைந்த** - அரிய தவ ஒழுக்க முடையோர் புகழ்கின்ற பெருமை வாய்ந்த. **பூரிப்புற்ற** - நிறைவை அடைந்தன. **விரதாதி** - (விரதம் + ஆதி; ) விரதம் முதலியவை கண்டம் - கழுத்து. **ஆரம்** - மாலை. பிறங்கிற்று - விளங்கிற்று.

**பொழிப்புரை :-** அருந்தவர்கள் புகழ் சீர்த்தி அமைந்த திரு கண்ணபிரான் அருளினாலே - அருமையான தவமுனிவர்கள் புகழ்கின்ற சிறப்பமைந்த கண்ணபிரான் திருவருளினாலே, பொருந்து விரதம் ஆதிகளால் மிக்கு இளைத்ததன் உடம்பு பூரிப்பு உற்றது - பொருந்திய நோன்பு முதலியவற்றால் மிகுதியும் களைத்த தன் உடல் பூரிப்பை அடைந்தது, இருந்த பழங்கந்தை செழு பொன் ஆடை ஆயிற்று -உடுத்தியிருந்த பழைய கந்தைத்துணி பொன்னாடையானது, இலங்கும் கண்டம் பெருதுளப மணியாரம் பெருவிலை முத்து ஆரம் ஆ பிறங்கிற்று - விளங்குகின்ற கழுத்தில் அணிந்திருந்த பெரிய துளசி மணி மாலைகள் பெரிய விலையை உடைய முத்து மாலைகளாகின

**சுசீலை குசேலரை வரவேற்றல்**

9. காலணி செம்பொற் சதங்கையந் தொடரும்
கதிர்மணித் தண்டையுஞ் சிலம்புஞ்
சாலவு மொளிர்ந்து கலின்கலி னென்னத்
தகைந்தபூங் கற்பகக் கொம்ப
ராலென நடந்து மங்கல மேந்தி
யளவறு பாங்கிய ராய
கோலமா மடவார் சூழ்ந்தனர் நடப்பக்
கொழுநனை எதிர்கொள்வான் வந்தாள்

**அரும்பதங்கள் :-** பாங்கியிராய கோலாமடவார் - சேடியராகிய அழகிய பெண்கள், கொழுநன் - கணவன், எதிர்கொள்வான் - எதிர்கொள்வதற்கு

**பொழிப்புரை :-** கால்அணி செம் பொன் சதங்கை அம் தொடரும் கதிர் மணி தண்டையும் சிலம்பும் - காலில் அணிந்துள்ள செம்பொன்னாற் செய்த அழகிய சதங்கைத் தொடரும் ஒளியுள்ள மணிகள் இழைத்த தண்டையும் சிலம்பும் ஆகிய அணிகள் எல்லாம், சாலவும் ஒளிர்ந்து கலின் கலின் என்ன - மிகவும் ஒளிர்விட்டு விளங்கி கலீர் என்று ஒலி எழுமாறு, தழைந்த பூ கற்பகம் கொம்பர் என நடந்து மங்கலம் ஏந்தி அளவு அறுபாங்கியர் ஆய கோலம் மா மடவார் சூழ்ந்தனர் நடப்ப கொழுநனை எதிர் கொள்வான் வந்தாள் -

செழித்த மலர்களையுடைய கற்பகத்தின் கொம்பர் போல நடந்து அளவற்ற தோழியராகிய அழகும் பெருமையும் உடைய மங்கையர் மங்கலப் பொருள்களைத் தாங்கியவர்களாய்ச் சூழ்ந்து உடன் வரச் சென்று தன் கேள்வனை எதிர்கொள்ள வந்தாள்.

**பிள்ளைகளின் செல்வச் செருக்கு**

10. குருமலர் செம்பொற் கலமெதிர் வைத்துக்
கோதறு வெள்ளிய மூரல்
பருகுதற் கமைந்த இன்சுவைக் குழம்புப்
பால்விரா யுபசரித் தூட்டத்
திருகுபு வேண்டா வென்மரு மதனைத்
திருமிப்பா ராதுசெல் குநரும்
அருகிய பசியு மில்லையென் மருமாய்
அணிமகார் செருக்குதல் கண்டான்.

**அரும்பதங்கள் :-** குருமலர் - ஒளிவீசுகின்ற கலம் - உண்ணுதற்குரிய பாத்திரம் மூரல் - சோறு. குழம்புப் பால்விராய் - குழம்பாகிய பால் சேர்த்து திருகுபுவேண்டா என்மரும் - கையைத் திருகிக் கொண்டு வேண்டா என்போரும். அருகிய - அற்ப அணிமார் - அழகிய மக்கள்

**பொழிப்புரை :-** குருமலர் செம்பொன் கலம் எதிர் வைத்து கோது அறு வெள்ளிய மூரல் பருகுதற்கு அமைந்த இன்சுவை குழம்பு பால் விராய் உபசரித்து ஊட்ட - ஒளி விரிந்த செம்பொன்னாற் செய்யப்பட்ட உண் கலத்தை எதிராக வைத்து குற்றமற்ற வெள்ளிய சோற்றையும் அருந்துதற்குரிய இனிய சுவையுடைய குழம்பாகிய பால் சேர்த்து இனிய மொழி கூறி உண்பிக்கவும் (உண்ணாராய்); திருகுபு வேண்டா என்மரும் அதனைத் திரும்பிப் பாராது செல்குநரும் அருகிய பசியும் இல்லை என்மரும் ஆய் அணி மகார் செருக்குதல் கண்டான். கையைத்திருகிக் கொண்டு வேண்டாமென்போரும், அப்பாற் சோற்றை திரும்பிப்பாராதவராய் செல்வோரும், சிறிதளவு பசிதானுமில்லை என்போருமாகி அழகிய மக்கள் செருக்குதலையும் கண்டான்.

## கிரகித்தற் பயிற்சி

1. கிருஷ்ணர் குசேலரை எவ்வாறு உபசரித்தார்?

2. குசேலருக்கும் கிருஷ்ணருக்கும் நெருங்கிய நட்பு நிலவியதை எடுத்துக் காட்டும் நிகழ்ச்சிகளை விளக்குக.

3. குசேலர் கண்ணபிரானிடம் வாய்திறந்து ஒன்றுங் கேட்காமைக்கான காரணம் யாது?

4. இருந்த பழங்கந்தை செழும் பொன்னாடையாயிற்று என்ற தொடர் மூலம் நீங்கள் விளங்கிக் கொண்டது என்ன?

5. பின்வரும் சொற்றொடர்களைச் சந்தி பிரித்து எழுதுக.
   - பழியில்பல் லுபசா ரங்கள் பண்ணவுந் தெரியா னாகி”
   - இலங்குசாந் தீபமுனி வருகாம ரடிவணங்க மாமறை கற்று
   - தந்தனை யாயி னன்று தருசுவைப் பக்க ணத்தென்..”
   - பெருந்துளப மணியாரம் பெருவிலை முத்தாரமாய்…”
   - கோலமா மடவார் சூழ்ந்தனர் நடப்ப”

**6.** பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.
   - மனைக்கிழத்தி
   - நிதியம்
   - பந்தனை
   - கந்தை
   - பக்கணம்
   - பூரிப்பு
   - நடலை
   - மடவார்
   - கதிர்
   - மூரல்
   - தெய்வம்

**7. பின்வரும் தொடர்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டன என்பதை விளக்குக.**

- ‘‘நின்னுடைய மனைக்கிழத்தி நிரம்பு பெரு நீர்மையளே? ”
- ‘‘இருவேமு முன்னாளி லிலங்கு………நினைத்திருக்கின்றாயோ?”
- ‘‘பந்தனை யகன்ற மேலோய்… சிந்தனை நின்றது”

8. இப்பாடலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை தொகுத்து உரைநடையில் எழுதுங்கள்

## இலக்கணம்

### பெயர்ச்சொல்

1. காலை, துவாரகை, நாள், பட்சணம்
2. பாதம், அங்கை, உலகு
3. நடத்தல், பூரித்தல், ஆரம், சதங்கை

இச் சொற்களை அவதானியுங்கள் அவை ஒரு பொருளையோ இடத்தையோ, காலத்தையோ, உறுப்பையோ, குணத்தையோ, தொழிலையோ சுட்டுவனவாக உள்ளன. அத்தகைய சொற்கள் பெயர்ச் சொற்கள் எனப்படும் என்பதை நீங்கள் முன்னரே அறிந்திருக்கிறீர்கள். இச்சொற்களின் தன்மையை இனங்கண்டு அவற்றை வகைப்படுத்தி கீழ்க்காணும் அட்டவணையை நிரப்புங்கள்.

| | |
|---|---|
| 1. பொருட்பெயர் | |
| 2. இடப்பெயர் | |
| 3. காலப்பெயர் | |
| 4. சினைப்பெயர் | |
| 5. குணப்பெயர் | |
| 6. தொழிற்பெயர் | |

1. பொருளைச் சுட்டுவது பொருட்பெயர் : உ + ம்: மனிதன், பறவை, மேசை, புத்தகம்
2. இடத்தைச் சுட்டுவது இடப்பெயர் : உ + ம்: வானம், மைதானம், காலி, பாடசாலை
3. காலத்தை சுட்டுவது காலப்பெயர் : உ + ம்:, பங்குனி, கோடை, நேரம், காலை
4. சினையை / உறுப்பைச் சுட்டுவது சினைப்பெயர் : உ + ம்: இலை, கனி, சிறகு, கை
5. பண்பை / குணத்தைச் சுட்டுவது பண்புப் பெயர் / குணப்பெயர்
   உ + ம் : கருமை, நீலம், குணம், தீமை
6. தொழிலைச் சுட்டுவது தொழிற்பெயர்
   உ + ம் : ஓடுதல், ஆடுதல், பாடல், நடத்தல்

ஏதாவது ஒன்றின் பெயரைக்குறிப்பது பெயர்ச்சொல். அது பொருட்பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப்பெயர், குணப் பெயர், தொழிற்பெயர், என ஆறுவகைப்படும்.

**மேல்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்**

1. மலையில் இருந்து **அருவி** பாய்ந்தது.
2. சிறிய **பறவை** வானத்தில் உயர உயரப் பறந்து சென்றது.
3. **நாற்காலி**யில் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

தடித்த எழுத்திலுள்ள சொற்கள் எவ்வகையின என இனங்காண முடிகிறதா எனப் பாருங்கள்.

அருவி என்ற சொல் ஒருவித காரணமும் இன்றித் தொன்று தொட்டு வழங்கிவருவதால் அதனை இடுகுறிப் பெயர் என அழைப்பர். (மரம், கடல், மண் போன்றன)

பறவை :- பறக்கின்ற காரணம் பற்றி வந்தமையால் அதனைக் காரணப் பெயர் என அழைப்பர் (அணி, பொன்னன், கணக்கன்)

நாற்காலி :- காரணம் கருதி இடப்பட்ட ஒரு பெயர் அக்காரணத்தை உடைய பிற பொருள்களைச் சுட்டாது ஒன்றை மாத்திரம் சுட்டி இடுகுறிப்பெயர் போல நிற்பின் அதனை காரண இடுகுறி என அழைப்பர்.

## பயிற்சி

(அ) 'அ' தொகுதிக்குப் பொருத்தமான சொல்லை 'ஆ' தொகுதியில் இருந்து தெரிவு செய்து இணையுங்கள்.

| | **'அ' தொகுதி** | | **'ஆ' தொகுதி** |
|---|---|---|---|
| 1. | காரணப்பெயர் | 1. | நிலம் |
| 2. | இடுகுறிப்பெயர் | 2. | நாற்காலி |
| 3. | காரணஇடுகுறிப்பெயர் | 3. | மண்வெட்டி |

(ஆ) இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்தெடுத்து இடைவெளியில் எழுதுங்கள்

1. தன்மை ஒருமைப் பெயர் .............................(நீ, நான்)
2. தன்மை பன்மைப் பெயர் .............................(நாங்கள், நீங்கள்)
3. முன்னிலை ஒருமைப் பெயர் .............................(அவன், நீ)
4. முன்னிலைப் பன்மைப் பெயர்.............................(நாங்கள், நீங்கள்)
5. படர்க்கை ஒருமைப் பெயர் ...............................(அவள், நான்)
6. படர்க்கைப் பன்மைப்பெயர் ...............................(நீங்கள், அவர்கள்)

(இ) இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப்பெயர்களைத் தொகுத்து விளக்கத்துடன் அறிக்கைப்படுத்துக.

(ஈ) அறுவகைப்பெயர்கள், மூவிடப்பெயர்கள், காரணப் பெயர்கள், இடுகுறி பெயர்கள் காரண இடுகுறிப் பெயர்கள் என்பவற்றுக்கான உதாரணங்கள் ஒவ்வொன்று தருக. அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

## மொழி வளம்

### தொடர்மொழிப் பொருளுக்கு ஒருசொல்

நீண்ட பல தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொல் பிரயோகித்து உணர்த்துவது மொழிநடைக்கு ஆற்றலும் வனப்பும் அளிக்கும். அன்றியும், அத்தகைய சொற்களின் அறிவு பொருட்சுருக்கம் எழும்போது மிகுந்த பயனளிக்கும்.

1. அணிந்துரை- ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர்வழங்கும் புகழுரை
2. இருநிதி - சங்கநிதி, பதுமநிதி
3. ஆச்சிரமம் - தபோதனர் வசிக்கும் இடம்
4. மூவேந்தர் - சேரர், சோழர் , பாண்டியர்
5. முத்தமிழ் - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்
6. நாற்படை - தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை.
7. ஆவணம் - நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி

8.ஆத்திகன் - கடவுளை நம்புபவன்

| | | |
|---|---|---|
| 8. ஓலக்கம் | - | அரசன், சபாமண்டபத்தில் அமைச்சர், படைத்தலைவர், அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூழ இருக்கும் இருக்கை |
| 9. நாற்பயன் | - | அறம், பொருள், இன்பம், வீடு |
| 10. நாற்குணம் | - | பெண் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு<br>ஆண் - அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி |
| 11. சதாவதானி அவதானிக்கும் | - | ஒரே சமயத்தில் நூறு விடயங்களை ஆற்றல் பெற்றவன் |
| 12. ஐந்திணை | - | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| 13. சிலேடை | - | இருபொருள் அமையத் தொடுவது |
| 14. அறுசுவை | - | கசப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு |
| 15. தீர்க்கதரிசி | - | எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் |
| 16. நவரத்தினம் | - | மரகதம், பவளம், நீலம், வச்சிரம், முத்து, பதுமராகம், கோமேதகம், புருடராகம், வைடூரியம் |
| 17. பதிப்புரை | - | ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப்பற்றிக் கூறும் உரை |
| 18. நவரசம் | - | சிருங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, இழிவு, அற்புதம், பயம், வெகுளி |
| 19.மெய்க்கீர்த்தி | - | செப்பேட்டிலேனும் கல்லிலேனும் செதுக்கப்படும் புகழ்மொழி |
| 20.தசாவதாரம் | - | மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், கிருஷ்ணன், கல்கி |
| 21.வைரவிழா | - | அறுபதாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா |

இவ்வாறான தொகைப் பெயர்ச் சொற்களை தேடி தொகுக்கவும்
( அகரவரிசைப்படி தேடித் தொகுத்தல் சிறப்பானது.)

## பயிற்சி

1. பின்வரும் சொற்களை விளக்கிக்காட்டுக.
   பிரமச்சாரி, அங்கதம், நாத்திகம், கொடுங்கோன்மை, மஞ்சரி

## ஆக்கத்திறன்

### நாடக ஆக்கம்

மனித உணர்ச்சிகளையும் அவற்றின் மோதல்களையும் பாத்திரங்களின் செயல்மூலம் வெளிப்படுத்தும் ஒரு கலையே நாடகக் கலையாகும். நாடக ஆசிரியன் கூற விரும்புவன யாவும் நாடகப் பாத்திரங்கள் மூலம் வெளிப்படுதல் வேண்டும். பாத்திரங்களின் உரையாடல்கள் அவற்றின் தகுதிக்கு ஏற்றனவாக அமைதலும் முக்கியமானதாகும். எனவே நாடகமொன்றை எழுதும் போது பின்வரும் விடயங்கள் பற்றி கவனம் செலுத்துதல் வேண்டும்.

### நாடகப் பாத்திரங்கள்

✯ நாம் எமது வாழ்வில் பலவித குணாம்சங்கள் கொண்ட மனிதர்களைச் சந்திக்கின்றோம். அவர்களது பண்புகளில் நடவடிக்கைகளில் தோற்றங்களில் வித்தியாசங்களை உணரக் கூடியதாக இருக்கும். அவ்வாறே நாம் படைக்க இருக்கும் நாடகப்பாத்திரங்களும் வித்தியாசமான குணவியல்புகளுடையனவாக இருப்பது இரசனைக்குரியதாகும்.

### உரையாடல்கள்

✯ நாடகப்பாத்திரங்களின் தன்மைகளை உரையாடல்களில் இருந்தே அறியமுடியும். எனவே நாடக வளர்ச்சிக்கு உதவும் தகவல்களை அல்லது பாத்திரத்தின் இயல்புகளைக் காட்டாத, தேவையற்ற பேச்சுக்களை அறவே தவிர்க்க வேண்டும். அதேவேளை உரையாடல்கள் மிகக் குறுகியதாகவும் அமையக்கூடாது.

### புறக்குறிப்புக்கள்

✯ ஒரு நாடகம் எழுதப்படும்போது வார்த்தைக்கு வார்த்தை, வசனத்துக்கு வசனம் பாத்திரங்களின் ஒவ்வொரு அசைவுக்கும் நெளிவுக்கும் புறக்குறிப்புக்கள் தேவைப்படுகின்றன. அந்தக்குறிப்புக்கள் நடிகர்களுக்கும் நெறியாளருக்கும் பெருமளவில் உதவி புரியும்.

### நாடகம் ஒன்றை ஆக்கும் போது

✯ நாடகத்துக்குத் தேவையான ஒரு கதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் அதன் மேலோட்டமான கதைச் சேர்வையை மனதிலே இருத்திக் கொள்ள வேண்டும்.

- ✯ தேர்தெடுத்த கதையின் உருவை அது மனதிலே என்ன கோலத்தில் அமைத்தாலும் அதனை மேடைக்கு ஏற்ற காட்சிகளாகக் காட்டக் கூடிய சம்பவத் தொகுதிகளாக வகுத்துக் கொள்ள வேண்டும்.
- ✯ நேரத்துக்குத் தக்கதாக அதனைச் சீர்மைப்படுத்தி கதைக்கு ஏற்ற உரை வடிவம் கொடுக்க வேண்டும்.
- ✯ பாத்திரங்களுக்குரிய புறக்குறிப்புகளுடன் எழுதி முடிக்க வேண்டும்.

**பயிற்சி**

- ✯ நீங்கள் கற்ற குசேலோபாக்கியானம் என்ற செய்யுட் பகுதியை மீண்டும் ஒரு முறை வாசித்துப்பாருங்கள்.
- ✯ குசேலருடைய முழுமையான கதையினைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்
- ✯ மேடைக்கு ஏற்ற காட்சிகளாகக் காட்டக்கூடிய சம்பவத் தொகுதிகளாகக் கதையினை வகுத்துக் கொள்ளுங்கள்.
- ✯ பத்து நிமிட நேரத்துக்குள் நடிக்கக் கூடியதாக சீரமையுங்கள்.
- ✯ மேடைக் குறிப்புகளுடன் கூடிய நாடகப் பிரதியாக்குங்கள்
- ✯ அதனை வகுப்பறையிலே நடித்துப் பழகுங்கள்.
- ✯ மாணவர் மன்றத்தில் மேடையேற்றுங்கள்.